**தம்புள்ள மாநகர சபை - 2022**

---------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தம்புள்ள மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்க கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தம்புள்ள மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள்தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள்முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள்தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்குரிய பெறவேண்டிய விளம்பர அறிவித்தல் பதாகை வருமானம் ரூபா 242,830 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பதிவேடுகளைப் பரீட்சித்து சீராக்கி கொள்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பெறவேண்டிய நிலுவை அறிவித்தல் கட்டணங்கள் ரூபா 300,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகளைப் பரீட்சித்து சீராக்கி கொள்வதாக | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மோட்டார் வாகன கட்டணங்கள் நிலுவை வருமானம் ரூபா 317,240 மற்றும் ஆண்டின் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா் 319,740 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஈ) | சிற்றுண்டிச்சாலையில் ரூபா 787,975 ஆன நிலுவை குத்தகை வாடகை மற்றும் ரூபா 36,000 ஆன நிலுவை கேள்வி வைப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு பதிவழிப்பதற்கு நடவடிப்பு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டில் ரூபா 3,697,548 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மின்பிறப்பாக்கி ரூபா 2,715,226 ஆக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் இயந்திர கணக்குகள் ரூபா 982,322 குறைத்துக் காண்பிக்கப்பட்டு இருந்தது. | | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 227,266 ஆன மீண்டெழும் செலவினம் கடன் கொடுத்தோரின் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (எ) | முற்பண பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது தீர்வு செய்யப்பட்ட முற்ப்பணம் தொகை ரூபா 12,023,250 ஆக இருந்த போதும் அது ரூபா 11,761,131 என கணக்கீடு செய்யப்பட்டமையால் முற்பண கணக்கின் மீதி ரூபா 262,119 ஆல் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது கடன் கொடுத்தோருக்காக செய்யப்பட்ட கொடுப்பனவு முற்பகணத்திற்கு வரவு வைக்கப்பட்ட தவறை சீராக்கும் போது செலவு வைக்கப்பட வேண்டிய சரியான கடன் கொடுத்தோர் தொகை ரூபா 8,491,706 ஆக இருந்த போதும் ரூபா 3,135,162 என செலவு வைக்கப்பட்டமைய்யால் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 5,356,544 கூடுதலாகவும் நிர்மான கடன் கொடுத்தோர் கணக்கு அப்பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | அத்தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது ரூபா 52,000 செலவிட்டு பொருத்தப்பட்ட புதிய மாநகர சபை பெயர் பலகையின் பெறுமதி மற்றும் ரூபா 1,700,000 ஆன சேதனைப் பசளை உற்பத்திக்காக கழிவுகளைத் துாளக்கும் இயந்திரத்தின் பெறுமதி மூலதனம் ஆக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | - மேற்படி - |
| (ஒ) | வீதி அபிவிருத்திக்காக உள்நாட்டு கடன் நிதியத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ரூபா 5,314,613 தொகை நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | கடன் தொகை பிரதேச சபையால் சொத்துக்களை கையளிப்பதற்கு முன்னர் பெற்றுக்கொண்ட கடன் தொகையாக இருப்பதால் குறித்த கடன் தொகையை கொடுப்பனவு செய வதற்கு சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் வரை வெளிப்படுத்தி உள்ளதாக | -மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | திகம்பத்தன சேதன பசளைத் தொகுதி நிலுவை வருமானம் ரூபா 735,775 குறைத்தும் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 3,538,371 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | -மேற்படி - |
| (ஔ) | மீளாய்வாண்டின்˙ வருமான செலவின கணக்கில் ரூபா 13,791,096 ஆன மிகை ரூபா் 15,353,281 என திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் திரண்ட நிதியம் ரூபா 1,562,185 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | -மேற்படி - |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீதி அண்மித்து அறிக்கையின் பிரகாரம் மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 11,095,174 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும் |

**1.6.3 அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| | அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்பு பங்களிக்கும் கணக்கு மற்றும் நிலையான சொத்துக்கள் கணக்கில் மீதிகள் ரூபா 198,915,218 ஆல் சமமாக இருக்காமைக்கான காரணங்களை சரி செய்து மற்றும் முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது அவ் வேறுபாட்டை மூலதன ஈடுபாட்டுக்கு வருமானத்தில் பங்களிப்பும் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு இருந்தது. | சபை ஆரம்பத்திலிருந்து அவ் வேறுபாடு காணப்படுவதுடன் வேறுபாடு இடம் பெற்ற காலத்தை திட்டவட்டமாக இனங்கான முடியாததால் குறித்த சீராக்கம் மேற்கொள்ளப்பட்டதாக | முறையான அங்கீகாரத்தின் பேரில் சீராக்க செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபரங்கள் கணக்கின் ஆரம்ப மீதியிலிருந்து ரூபா 2,053,094 தொகை அங்கீகாரம் இன்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | பிரதேச சபையால் சொத்துக்களை கையளிக்கும் போது அதன் உள்ளவாறான பெறுமதியை விட கூடிய பெறுமதி ஒன்று 2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கணக்கீடு செய்ததை சீராக்குவதற்கு உரிய பதிவு என்பதாக | - மேற்படி - |

### 1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 16,817,250 ஆன நிலுவை கடை வாடகை தொடர்பாக வாடகை பதிவேடு அல்லது கோவைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாது இருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகளுக்காக பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர கட்டளைச் சட்டம் 252 ஆம் அதிகாரம்) 40(1)(எ) | சபைக்கு சொந்தமான வியாபார கடைகளை வாடகைக்கு வழங்கும் போது குத்தகையாளருடன் எழுத்து மூல உடன்படிக்கை ஒன்றுக்கு வராமல் 50 கடைகள் வெளித் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | குத்தகையாளர்களுடன் உடன்படிக்கை செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | எழுத்து மூல உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) | 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 673,100 ஆன முற்பணம் 01 மாதம் முதல் 04 மாதங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனைத்து மேலதிக தொகையும் தற்போது தீர்வு செய்யப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெறுகை வழிகாட்டி கோவை | | | |
| | 2020 மார்ச் 25 ஆம் திகதி மேலதிக 35 இன் 2.14.1, 5.3.11(அ), 4.3, 6.3.3(அ), 8.9.1, 5.4.8(அ) ஆம் பந்திகள் | திகம்பதன கழிவுப்பொருள் நிலையத்தின் உள்ளக வீதியை வீதியில் ரூபா 4,051,700 ஆன வெளிச்சமுறையை அமைக்கும் செயற்த்திட்டதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்கினர் கேள்வி பாதுகாப்பு மற்றும் செயலாற்றல் பாதுகாப்பை சமர்ப்பிக்கப்அ படாதிருந்ததுடன் நிர்மாணத் திற்காக மொத்த கிரய மதிப்பீடொன்றும் தயாரிக்கப் | உடன்படிக்கை செய்வது கூடிய கூட காலம் இல்லாததால் வடிவமைக்கப்பட்ட நிர்மாண முறைமை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டதால் செயலாற்றல் பாதுகாப்பு பெற்றுக் கொள்வதற்கு வழங்கள் கடிதத்தை விநியோகிப்பதற்கு | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | |
|---|---|
| பட்டிருக்கவில்லை. தெரிவு செய்யப்பட்ட கேள்வி தாரருக்குர் அளிப்புக் கடிதமொன்று வழங்கப்படாதிருந்ததுடன் கேள்வி தாரருடன் உடன்படிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. குறைந்த இரண்டு உறுப்பினர்களுடன் கூடிய விலை திறக்கும் குழுவின் மூலம் கேள்வி பகிரங்கமாக திறக்கப்பட்டிருக்கவில்லை. | முடியாததாகவும் பதில் மாநகர ஆணையாளர் கேள்வி திறக்கும் திறக்கும் போது சமூகம் அளிக்கவில்லை என்பதாகவும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவீனத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,000,278 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 13,485,176 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,000,000 | 5,662,506 | 3,933,669 | 4,831,130 | 6,000,000 | 6,346,879 | 3,071,973 | 5,511,465 |
| (ii) | வாடகை | 9,566,400 | 8,510,240 | 5,947,612 | 10,063,776 | 5,000,000 | 5,345,345 | 3,834,613 | 9,410,937 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 5,000,000 | 5,152,294 | 5,152,294 | - | 6,660,000 | 4,298,162 | 4,164,527 | 133,635 |
| (iv) | நீதிமன்ற தண்ட பணம் | 1,500,000 | 71,656 | 43,798 | 27,858 | 5,000,000 | 199,750 | 226,000 | 59,250 |
| (v) | முத்திரைக் கட்டணங்கள் | 10,000,000 | 11,068,800 | 9,741,700 | 5,461,083 | 28,000,000 | 12,695,950 | 13,148,850 | 4,030,000 |
| (vi) | ஏனைய வருமானம் | 18,228,400 | 14,573,127 | 6,190,398 | 12,682,001 | 47,060,000 | 22,838,047 | 21,187,220 | 38,828,433 |
| | | 49,294,800 | 45,038,623 | 31,009,471 | 33,065,848 | 97,720,000 | 51,724,133 | 45,633,183 | 57,973,720 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| | 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி திருத்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை வரி அறவிடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிலிருந்து வீதவரி மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | திருத்திய மதிப்பீட்டு அடிப்படையில் வீத வரி அறவிட வேண்டும் |
| (ஆ) | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 194 கடைகளில் இருந்து ரூபாய் 4,434,045 ஆன கடை வாடகை நிலுவை ஒன்று காணப்பட்டது அதில் 55 கடைகளுக்கு உரிய தவணைகள் 10 முதல் 485 வரையான வீச்சில் நிலுவையாக இருந்த 3,373,702 ஆக இருந்தது. | நிலுவைத் தொகையை செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவித்தல், கடைகளை முத்திரையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தமை நிலுவை நிலுவைகளை பகுதியாக கொடுப்பனவு செய்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (இ) | **அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்** | | |
| | 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ஹொட்டெலொன்றிருந்து அனுமதி பத்திர கட்டணம் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 504,300 ஆன நிலுவை மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை | வியாபார வரி கொடுப்பனவு செய்யாமை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் அறவிட வேண்டும். |
| (ஈ) | **ஏனைய வருமானம்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 7,370,046 ஆன வாகன நிறுத்தல் கட்டணம் நிறுத்தக் கட்டணம் மற்றும் ரூபா | வாகன நிறத்தக் கட்டணத் தொகையை பதிவழிக்குமாறு தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் | உடன்படிக்கை பிரகாரம் வருமானம் குறித்த திகதிகளில் அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| 2,018,775 ஆன முச்சக்கர வண்டி நிறுத்தக் கட்டணம் என மொத்தம் 9,338,821 ஆக இருந்தது. | வேண்டுகோள் கடிதம் கிடைத்துள்ளதுடன் அதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக | நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(உ) நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 5,461,083 ஆகவும் இருந்தது. | நிலுவைத் தொகையை அறவிடுவதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் நேர் உழைப்பு பங்களிப்பு அடிப்படையில் ரூபா 5,542,595 செலவிடப்பட்டு பிணைக்கப்பட்ட அச்சுக்கல் பிடித்து நிர்மாணிக்கப்பட வேண்டிய 26 வீதிகளின் இரண்டு பக்கங்களும் கொங்கரீட் வரி மற்றும் ABC இடுதல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருக்கையில் முன்னைய ஆண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 26 வீதிகளில் நிர்ணயிக்கப்பபட்டதாக போலியாக குறிப்பிட்டு ரூபா 25,822,983 ஆன பட்டியல் தயாரிக்கப்பட்டு கிராமிய வீதிகள் உட்கட்டமைப்பு வசதிகள் ராஜாங்க அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது மேற்படி வீதிகளுக்காக இடைத்தொடர்பு அச்சுக்கள் போக்குவரத்து செய்யப்படாமல் இருக்கையில் தயாரிக்கப்பட்ட நிலைமை அறிக்கைக்காக ரூபா 248,000 செலவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது. | நாட்டில் காணப்பட்டு கொரோனா தொற்று நிலைமை மற்றும் நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறையின் பேரில் நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்தது. தேவையான நேரத்தில் நிதி ஏற்பாடு மேற்கொள் வதற்காக மாத்திரம் மதிப்பீடு பட்டியல் மற்றும் பரிசோதனை அறிக்கை அனுப்பியுள்ளதாக | காணப்படும் சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் போன்றவற்றிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மே 09 ஆம் திகதி அரலியகஹ மாளிகையில் நடைபெற்ற மக்கள் ஒன்று கூடலுக்கு சமூகமளிப்பதற்காக மாநகர முதல்வர் உத்தியோக வண்டியை பயன்படுத்தி இருந்ததுடன் மீரிகம அதிவேக நுழைவிற்கு அண்மையில் தீப்பிடிப்புக்கு உட்பட்டு விபத்துக்கு உட்பட்டிருந்தது. இவ்வண்டிக்கு ரூபா 11,000,000 ஆன நட்டம் தொடர்பாக நி. பி. 104(4) அறிக்கையொன்று மீளாய்வண்டின் இறுதிவரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 104(4) பரிசோதனை குழு வொன்று உள்ளுராட்சி மன்ற திணைக்கத்தின் மூலம் நியமிக்கப்பட்டதன் பின்னர் குறித்த பரிசோதனையின் பரிந்துரை அடிப்படையில் அடுத்த நடவடிக்கைகளை எடுப்பதாக | விரைவாக பரிசோதனை நடவடிக்கைகளை மேற் கொண்டு நி.பி 104(4) அறிக்கையின் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | பேருந்து நிலையத்தின் 05 கடைகளை உடைத்து ஒரு கடையாக பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு 2020 திசெம்பர் 4 ஆம் திகதி வெளிதரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்படி குத்தகை உடன்படிக்கையின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக திகதியொன்று குறிப்பிடப்படாதிருந்ததால் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு குறைந்தது 03 மாத காலப்பகுதியை வழங்கியிருந்தால் 2021 ஏப்ரல் முதல் மீளாய்வாண்டி இறுதிவரை குத்தகை வாடகையாக ரூபா 275,000 ஐ அறவிடுவதற்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. | 2023 ஏப்ரல் 01 ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் குத்தகையாளிடமிருந்து குத்தகை வாடகை அறவிடுவதற்காக 2023 மார்ச் 02 ஆந் திகதி முதல் பொதுச் சபை மூலம் தீர்மானிக்கப்பட்டதாக. | உடன்படிக்கை மேற்கொண்டு நிர்மாணங்கள் பூர்த்தி செய்து வாடகை அறவிடப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபை மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்ற பாடசாலை ஒன்று இல்லாதிருக்கையில் 2019 செப்டம்பர் 16 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை காப்பாளர் பதவி ஒன்றிற்காக உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு நூலகத்தில் நூலக உதவியாளராக கடமைகள் கையளிக்கப்பட்டு முனனைய ஆண்டிக்காகவும் மீளாய்வாண்டுக்காகவும் ரூபா 919,767 சம்பளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | மத்திய மாகாண பிரதான அமைச்சு செயலாளரின் சீபிசி/டி.எம்.எஸ் த.மா.ந 1/07/28 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தம்புள்ள பொது நூலகத்திற்கு இணைக்கப்பட்டு முன்பள்ளி பாடசாலை விடயம் தொடர்பான கூட்டிணைப்பு நடவடிக்கைகள், பிரதேசத்தில் முன் | ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கடமையில்லை சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பள்ளி பாடசாலைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பெற வேண்டிய 07 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 200,523,946 ஆக இருந்தது. | பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவிடுவதற்கும் ஈடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்து வருவதாக. | நிலுவை பெறுவனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,169,352 ஆக இருந்தது. | கடன் கொடுத்தோர் மீதிகள் காணப்படுகின்ற நிதி நிலைமை அடிப்படையில் எதிர்காலத்தில் கொடுத்து தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நகசபை எல்லைக்குள் காணி துண்டாக்கி விற்பனை செய்வதால் மாநகர சபைக்கு சபைக்கு கிடைத்த 03 காணித் துண்டுகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் இது தொடர்பாக விசாரிக்கப்பட்டுள்ளதாக | காணியின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மாநகர சபைக்குரிய ரத்மல்கஹஅல கந்தலம வீதியில் அமைந்துள்ள லிஹினியாகொல்ல காணியில் சபையின் அங்கீகாரமின்றி நலன்புரி சங்கமொன்றினால் சனசமூக நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணத்திற்குரிய திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக தேவையான ஆவணங்களைத் தயாரித்து வருவதாக | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குறித்த சேவைகளை பெற்றுக் கொள்ளாமல் வாகன திருத்தங்களுக்காகவும் சட்டத்தரணி சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக 07 சந்தர்ப்பங்களில் தனியார் கராஜ் ஒன்றுக்கும் வெளித்தரப்பினருக்கும் ரூபா 3,607,527 ஆன முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பொதுச்சபையின் அங்கீகாரத்தின் பேரில் குறித்த திருத்தங்கள் மற்றும் சேவைகளுக்காக செலவினத்தின் ஒரு பகுதி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக | சேவைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1986 மார்ச் 10 ஆம் திகதிய 392/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 22 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 03 ஆதன நிறுவனங்களிடமிருந்து பகுதிகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட காணிகளில் சமூக மற்றும் களியாட்ட நடவடிக்கை களுக்காக பொருத்தமான காணி பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாதஇடங்களில் இருந்து மொத்தம் 03 ரூட் 24.5 பேர்ச் அளவிலான 09 காணி துண்டுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. | பெற்றுக் கொள்ளப்பட்ட காணித் துண்டுகள் பொது நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுப்பதாக | பொது நடவடிக்கைகளு க்காக பொருத்தமான காணிகளை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்துக்காக நிலையத்தின் ரூபா 20,972,104 செலவிடப்பட்டு பொருத்தப்பட்டிருந்த கழிவுப் பொருள் தாங்கி கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் அவ்வப்போது செயற்படாது இருந்தமை, இயந்திரத்தின் பராமரிப்பு மணித்தியால 3000 இனை விஞ்சி இருக்காத போது திருத்தங்களுக்காக ரூபா 969,192 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை, இயந்திரத்தில் இருந்து வெளியேறும் வாயு, புகை கசிவு முறைக்கு இணங்குவதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் தரச் சான்றிதழ் வழங்காமை கழிவுப்பொருள் தாங்கியின் அனைத்து உபபாகங்கள் விதந்துரைகளின் பிரகாரம் இயங்குகின்றதா என பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தல் ஒன்று அது தொடர்பான அறிவுள்ள தரப்பினர் இருந்து பெற்றுக்கொள்ளாமை, இணங்கப்பட்ட பிரகாரம் சபையின் ஒவரு உத்தியோகத்திற்கு வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பத்தை வழங்காமை மற்றும் 04 பராமரிப்பு தடவைகளை பூர்த்தி செய்யாமை போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமல் இயந்திரத்துக்குரிய ரூபா 1,941,861 நிறுத்தி வைத்தல் தொகையை மீளாய் வாண்டின் போது 03 சந்தர்ப்பங்களில் | திருத்தங்களை மேற்கொண்டு முறையாக செயல்படுவதற்கு கொண்டு வரப்பட்டு 2022.06.20 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டதாகவும் அந்த இயந்திரத்தை எதிர்காலத்தில் செயற்திறனாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக | உத்தரவாத காலத்திலும் சொத்துப் பராமரிப்பு திருத்தங்களுக்காக செலுத்திய செலவினம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | விடுவிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் குறித்த இயந்திரத்தை செயற்படுத்த முடியாது இருந்தது. | | |
| (ஆ) | நகர பிதா மற்றும் பிரதி நகர பிதாவின் தனிப்பட்ட பதவி யணிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை இன்றி 08 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு முன்னைய ஆண்டுக்காக ரூபா 2,761,000 தொகையும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,980,000 தொகைமாக மொத்தம் ரூபா 4,741,000 தொகை ஆளுநரின் அங்கீக இல்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நகர சபைக்கு படிகள் கொடுக்கும் இயலுமை காணப்பட்டதன் பெயரில் மாநகர கட்டளை சட்டத்தின் 40-1 மூலம் இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் பெயரில் குறித்த பதவியில் உருவாக்கப்பட்டதாக | ஆட்சிக்கு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்** | | |
| | பெறுமதி இனங்கான முடியாத மிட்சுபிஷி ஜீப் வண்டியொன்று 2010 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் அழிவடைவதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது. | ஓட்ட நிலைமையில் இல்லாததால் கை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | கை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை**<br>சபைக்கு உரிய 10 காணித்துண்டுகள் நீண்ட காலமாக பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கவில்லை. | ஆக்கபூர்வமான நடவடிக்கை காணி பயன்படுத்தப்பட வேண்டும் |
| (இ) | **கையேற்கப்படாத சொத்துக்கள்** | | |
| | 2018 ஒக்டோபர் 10 ஆம் திகதி 03/2018 இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் பயன்படுத்தப்படும் 07 வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | உரித்தினைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஈ) | ரன்திய உயன காணி ஏலவிற்பனையிலிருந்து பொது நடவடிக்கைகளுக்காக மாநகர சபைக்கு ஒதுக்கப்பட்ட 10 பேர்ச் ஆணி தொடர்பாக பதிவேடுகள் மற்றும் கோவைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் தகவல்களை சமர்ப்பிப்பதாக | காணியின் உரித்தினை ஆராய்ந்து பார்த்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தால் வேண்டும் |

### 3.7 பெறுகை செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 4,350,000 ஆன 250 வீதி விளக்குகளைக் கொள்வனவு செய்வதற்காக இரண்டு சந்தர்ப்பங்களின் போது கேள்வி கோரப்பட்டிருந்தது. கேள்வி கோரலின் போது விதந்துரைகளில் உற்பத்தி செய்யப்பட்ட நாடு, வியாபார பெயர் தொடர்பாக விசாரிக்காதிருக்கையில் உத்தரவாத காலம் இரண்டு ஆண்டுகள் எனக் கருதி விலை விபரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கையில் உத்தரவாத காலம் 03 வருடங்கள் என கருத்திற் கொள்ளப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட நாடு மற்றும் வியாபார பெயர்களை சமர்ப்பிக்காத, கேள்வியை மதிப்பீடு செய்து குறைந்த விலை நிராகரிக்கப்பட்டு வேறு வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட காரணத்தினால் சபை நிதியத்துக்கு ரூபாய் 412,500 ஆன நட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. | 03 ஆண்டுகள் உத்தரவாத காலம் மற்றும் தரத்தில் உயர்ந்தது என்பதால் விலை விபரங்கள் இடையே குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனம் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்ததாக | கோரல் கடிதத்தில் விதந்துரைகள் சரியாக தயாரித்து அதன் அடிப்படையில் கேள்வி கோரப்பட வேண்டும் |

### 3.8 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திகம்பதன கழிவுத் தொகுதியின் உள்ளக வீதிகளுக்கு வெளிச்ச முறைமையை அமைப்பதற்காக தயாரிக்கப்பட்ட சமர்ப்பிக்கப்பட விதந்துரைகளுக்கும் புறம்பாக வேறு மின் விளக்குகள் தூண்கள் பொருத்தப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் 90 மின் விளக்கு தூண்களுக்காக ஒரு தூணுக்கு ரூபா 12,100 வீதம் ரூபா 1,089,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்கு தூண்கள் முறையாக பொருத்தப்படாமை காரணமாக ஆடிக்கொண்டு காணப்பட்டதுடன் அநேகமான இடங்களில் வயர் உரிய முறையரில் இழுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட சீரற்ற சுகாதார மற்றும் பொருளாதார நிலைமை அடிப்படையில் மின் தூண்களின் பலம் மற்றும் வெளிச்சம் வழங்கும் இயலுமை அடிப்படையாகக் கொண்ட விதந்துறைகளுக்கு புறம்பாக மின் தூண்கள் தயாரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதாக | மதிப்பிடப்பட்ட விதந்தரைகளுக்கு இணங்க செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்**<br>சிரேஷ்ட மட்டத்தில் காணப்படும் நகர ஆணையாளர் மற்றும் மாநகர செயலாளர் ஆகிய இரண்டு பதவிகள் மற்றும் மூன்றாம் மட்டத்தின் கீழ் காணப்படும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி மொழிபெயர்ப்பாளர் மற்றும் இடமாற்ற உத்தியோகத்தர்கள் உட்பட 75 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. அதற்கு மேலதிகமாக 08 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளும் 50 சுகாதார தொழிலாளர் பதவிகளிலும் மிகை ஒன்று காணப்பட்டது. | சில பதவிகளில் பதில் கடமை புரிவதற்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் வெற்றிடங்கள் தொடர்பாக குறித்த தரப்பினருக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் | வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கும் அங்கீகரிக்கப்பட்ட பதவிஅணியின் வரையறைக்குள் உள்ளவாறான பதவியணியினைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(ஆ) ஊழியர் கடன்**<br>தம்புள்ள மாநகர சபையில் இருந்து இடர் கடன்களை பெற்றுக் கொள்வதற்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்து ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் காத்திருப்பு பட்டியிலில் உள்ள 11 விண்ணப்பதாரிகளைக் கருத்திற் கொள்ளாமல் மீளாய்வாண்டில் கடக்ளைப் பெற்றக்கொள்ள விண்ணப்பித்த 09 விண்ணப்பதாரர்களுக்கு ரூபா 1,710,000 ஆன இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. | காத்திருப்பு பட்டியலில் உள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பங்களில் இருந்த குறைபாடுகளை சரி செய்யாமை மற்றும் அவசர தேவைப்பாட்டுக்காக நகர முதல்வரால் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்காக இடர் கடன் வழங்கப்பட்டதாக | காத்திருப்பு பட்டியலில் வரிசைக்கிரமமாக இடர் கடன் வழங்கப்பட வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சுற்றாடல் சிக்கல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டம் (2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி எல்.டி.பி 4/8/(XII) ஆம் திருத்தின் பிரகாரம் எந்த ஒரு நபரும் பிளாஸ்டிக் அடங்கியுள்ள கழிவுப்பொருட்களை அல்லது இலகுவில் உருகும் ஏனைய பொருட்கள் வெளியேற்றுஙதல், எரித்தல், தீ வைப்பதற்கு முயற்சித்தல், இடமளித்தல் அல்லது அனுமதி அளித்தல் மேற் கொள்ளக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதும் வைத்தியசாலைகளின் சிகிச்சை மற்றும் ஏனைய உக்காத கழிவுப் | வைத்தியசாலை சிகிச்சை கழிவு பொருட்களின் கேள்வி இவ்வாண்டில் தம்புள்ள மாநகர சபைக்கு கிடைக்கவில்லை என்பதாக | சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| பொருட்களை திகம்பத்தன கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் திறந்த சுற்றாடலில் எரிக்கப்பட்டு இருந்தன. | | |
| (ஆ) மாத்தளை மாவட்டத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 397,100,000 தொகை செலவிடப்பட்டு 2019 ஆம் ஆண்டின் போது திகம்பத்தன கழிவு பொருள் முகாமைத்துவ நிலையம் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 20 முதல் 80 தொன் வரையான சேதன பசளையை அதிகரித்துக் கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை நாளொன்றுக்கு 25 தொன் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கையில் மாநகர சபை அதிகார பிரதேசத்தில் நாளாந்தம் சேரும் கழிவுகள் வேறுபடுத்தப்படாமல் நிலையத்தின் பின்பகுதியில் குழி ஒன்றுக்குள் வெளியேற்றும் முறைமையொன்று பின்பற்றப்பட்டு இருந்தது. | கழிவு ஒதுக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேவையான ஊழியர்கள் போதிய அளவு இல்லாமையால் காணப்படுகின்ற ஊழியர்களைக் கொண்டு வேறாக்கும் நடவடிக்கைகள மேற்கொள்ளப்படுவதாக | கழிவுப்பொருட்களை வேறாக்கி பெற்றுக் கொள்ளப்பட்டு உக்காத கழிவுகளை மீள் சுழற்சி செய்வதற்கும் உக்கக்கூடிய கழிவுகளை சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கும் அழிவடையச் செய்யப்பட வேண்டிய கழிவுகளை தட்டின் மூலம் எரிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி நியதிகளின் பிரகாரம் மாநகர சபையினால் முறையாக நிலைபேறான நோக்கங்களை இனங்கண்டு செயற்படுத்தியிருக்க வில்லை. | தற்போது போது நிலையான அபிவிருத்தி இலக்குகள் தம்புள்ள மாநகர சபையினால் செயற்படுத்தப்பட வில்லையென தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |